அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்
ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG
ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 43 - 2023*

**28.10.2023 சனிக்கிழமை அன்று வழமையான பாடசாலை நடைபெறமாட்டாது. பதிலாக..**

**கலை - 28.10.2023 சனிக்கிழமை** - நவராத்திரி விழா நடைபெறும்.

## நவராத்திரி விழா 2023

இடம்: சென் பாடசாலை மண்டபம்

முகவரி: Hasselveien 4, 1470 Lørenskog

காலம்: 28.10.2023, சனிக்கிழமை

நேரம்: 10:00 மணி

**அனைவரையும் அன்போடு வரவேற்றுக் கொள்கின்றோம்.**

இவ்வாண்டு நவராத்திரிவிழா அன்றும் சிறப்பாக லோறன்ஸ்கூக் நகரசபையிலிருந்தும் சில தன்னார்வ நிறுவனத்திலிருந்தும் சிலர் கலந்து சிறப்பிப்பார்கள். அவர்களையும் நாம் வரவேற்றுக் கொள்வோம்.

இதற்கான ஏற்பாடு செய்யும் பணியில் எமது பெற்றோர்குழுவினர் மற்றும் ஆசிரியர்கள் ஈடுபட்டுக் கொண்டுள்ளனர்.

குறிப்பு: இம்முறை தயார்படுத்தலுக்காக முதல்நாள் மண்டபத்தினைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பதிலாக நிகழ்வு நாளன்று காலை 6மணிமுதல் பயன்படுத்தலாம். எனவே பெற்றோர்குழுவினருக்கு பல பெற்றோரின் உதவிகள் தேவைப்படுவதால் பலர் முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றோம். இந்நிகழ்வினைத் திறம்பட நடாத்துவதற்கு அனைத்து பெற்றோரும் ஒத்துழைக்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## ஏடு தொடக்கல்

அன்று இவ்விழாவில் வைத்து தங்கள் பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க விரும்புபவர்கள் வெள்ளிக்கிழமை இரவு 8மணிக்கு முன்னதாகத் தொடர்புகொள்ளவும். தொலைபேசி எண் 95875537.

## 04.11.2023 சனிக்கிழமை - பெற்றோர்குழுத் தெரிவு.

புதிதாகத் தெரிவான வகுப்புப் பிரதிநிதிகளுக்கான சந்திப்பு இடம்பெற்று, புதிய பெற்றோர்குழுத் தெரிவு இடம்பெறும்.அனைத்து வகுப்புப் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம். நேரவிபரம் அடுத்த வாராந்தத் தகவலில் வழங்கப்படும்.

## நிதி 2023

அன்னையினால் தனிப்பட்ட முறையில் அனுப்பப்பட்ட அங்கத்துவக் கட்டணத்தினை சிலர் இன்னும் செலுத்தவில்லை என்ற தகவல் கிடைத்துள்ளது. எனவே இதுவரை செலுத்தாமல் இருந்தால் அதனை விரைவில் செலுத்தும்படி வேண்டிக்கொள்கின்றோம். **அக்கட்டணத்தினையும் செலுத்தியவர்கள் மட்டுமே முழுமையான உறுப்பினர் உரிமையைப் பெற்றவர்களாவர் என்பதனை அறியத்தருகின்றோம்.**
ஐயப்பாடுகள் இருப்பின் நிதிப்பொறுப்பாளருடன் மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளவும்.

## 29.10.2023 **ஞாயிற்றுக்கிழமை அன்று பல்லின கலாச்சார ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெறும்.**

வழமையில் ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடலாக இடம்பெறுவதுண்டு. எமது 20வது ஆண்டுவிழாவிற்கு லோறன்ஸ்கூக்கில் உள்ள சக தன்னார்வ நிறுவனங்களை அழைக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதால், இம்முறை எமது பாடசாலையின் நடைமுறை மற்றும் செயற்பாடுகளைப் பற்றி லோறன்ஸ்கூக்கில் உள்ள ஏனைய தன்னார்வ நிறுவனங்களுடன் பகிர்ந்துகொள்ளும் ஒரு நிகழ்வாக இதனை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் லோறன்ஸ்கூக் நகரசபையினரும் நேரடியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவ்வொன்றுகூடல் நடைபெறவிருக்கும் மண்டபத்தில் மட்டுப்படுத்தப்பட்ட இருப்பிடங்கள் மட்டுமே உள்ளதால் ஆசிரியர்கள், பணியாளர்கள், நிர்வாகம் மற்றும் நிகழ்ச்சி வழங்கும் மாணவர்களுடன் இந்நிகழ்வு நடைபெறும். ஆண்டுவிழாவிற்கு வழங்கிய (மீள் வழங்க ஏற்பாடு செய்யக்கூடிய) சில வகுப்பு மாணவர்களின் நிகழ்வுகளுடன் நடைபெறும்.
நிகழ்ச்சி வழங்கும் மாணவர்களைப் பெற்றோர்கள் அழைத்து வரும்/செல்லும் நேரவிபரங்களை விரைவில் அவர்களுக்குரிய வைபர் குழுமங்களில் அறியத்தருவோம்.

## எமது வளாக இக்கல்வியாண்டில் (2023) நடைபெறவுள்ள நிகழ்வுகள்

| | |
|---|---|
| ஆண்டுக்கூட்டம் பகுதி 2 | - 11.11.2023 (நிகழ்ச்சிநிரல் இவ்வாராந்தத் தகவலுடன்). |
| நத்தார்விழா | - 16.12.2023 |

*எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.*

தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

<u>நன்றி!</u>

<u>நிர்வாகம்</u>
அன்னை பூபதி லோறன்ஸ்கூக் வளாகம்

**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், லோறன்ஸ்கூக்**

**ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, LØRENSKOG**

**ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, LØRENSKOG**

# நவராத்திரி விழா 28.10.2023 நேரம் 10:00

## நிகழ்ச்சி நிரல்

1. வரவேற்பு
2. அகவணக்கம்
3. பாடசாலைக் கீதம் - *4ம் வகுப்பு அ மற்றும் ஆ மாணவர்கள*
4. பூஜை/வழிபாடு - *திருமிகு. இராதாகிருஷ்ணராஜாக் குருக்கள் நடராஜாக் குருக்கள்*
5. நடனம் - *நடனவகுப்பு மாணவர்கள்*
6. பாட்டு - *சங்கீதவகுப்பு மாணவர்கள்*
7. உயிர் எழுத்துகள் பாடல் - *சிறுவர்நிலை மாணவர்கள்*
8. தமிழ்மொழியின் சிறப்பு - *2ஆம் வகுப்பு அ மாணவர்கள்*
9. பாடல் அபிநயம் - *1ஆம் வகுப்பு அ மற்றும் ஆ மாணவர்கள்*
10. சிறப்புரை - *Toini Kristensen லோறன்ஸ்கூக் நகரசபை*
11. பழங்கள் பற்றிக் கூறுவார்கள் - *3ஆம் வகுப்பு மாணவர்கள்*
12. குறுநாடகம் - கண்ணாடிப் பாடங்கள் - *5ஆம் வகுப்பு*
13. திருக்குறள் - *6ஆம் வகுப்பு*
14. ஒப்படை - *9ம் வகுப்பு மாணவர்கள்*
15. அழகே அழகே பாடல் - *7ஆம் வகுப்பு*
16. மதிப்பளிப்பு - *நிர்வாகம்*
17. நன்றியுரை - *பெற்றோர்குழு 2022 - 2023*
18. திருச்சோறு (பிரசாதம்) வழங்கல்.

*அவசியம் ஏற்படின் நிகழ்ச்சிநிரலில் மாற்றங்கள் ஏற்படும்.* கலை - நிர்வாகம்